# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

www.tsch.org.au info@tsch.org.au


# அரையாண்டுப் பரீட்சை 2022

ஆண்டு: 6 திகதி: 18.6.2022

நேரம்: 2 மணித்தியாலங்கள்

ஆசிரியர்:திருமதி தேவரதி குலராஜா
உதவி:செல்வி ஜனனி குலராஜா

மாணவர் பெயர்: ______________________________

| வினாக்கள் | வினா புள்ளி | பெற்ற புள்ளி |
|---|---|---|
| வினா 1 | 20 | |
| வினா 2 | 10 | |
| வினா 3 | 10 | |
| வினா 4 | 10 | |
| வினா 5 | 15 | |
| வினா 6 | 15 | |
| வினா 7 | 20 | |
| **மொத்தப் புள்ளிகள்** | **100** | |

– BLANK PAGE –

| வினா இல | 1 | புள்ளிகள் | 10 | பக்கம் | 3 |
|---|---|---|---|---|---|

பின்வரும் உரைப்பகுதியை அவதானமாகப் படித்து கீழ் உள்ள வினாக்களுக்கு பூரணமான விடைதருக.

அமெரிக்கா நாட்டின் பூர்விகக் குடிமக்கள் செவ்விந்தியர்கள் என அழைக்கப்படுகின்றனர். அவர்கள் மஞ்சள் நிறம்கலந்த செந்நிறம் உடையவர்கள். அம்மக்கள் அமேரிக்காவின் குளிர்மிகுந்த காடுகளிலும் ‘பிரெய்ரி’ என வழங்கப்படும் பரந்த புல்வெளிகளிலும் கூடாரங்கள் அமைத்து வாழ்கின்றார்கள்.

செவ்விந்தியர்கள் கருமையான நீண்ட தலைமயிர் உடையவர்கள். பரந்த முகமுடையவர்கள். உரம் வாய்ந்த உடல் கொண்டவர்கள். அவர்கள் விருந்தினரை அன்புடன் உபசரிக்கும் பண்புடையவர்கள். ஆனால் பகைவரிடம் மிகவும் கடுமையாக நடந்துகொள்வார்கள். போர்க்காலங்களில் செவ்விந்தியர்கள் தங்கள் உடலில் பலவிதவண்ணங்களைத் தீட்டிக் கொள்வார்கள். தலையில் செங்கழுவின் இறகுகளை அணிந்து அச்சம் உண்டாக்கும் தோற்றத்துடன் காணப்படுவார்கள்.

செவ்விந்தியர்கள் காடுகளில் வாழும் விலங்குகளை வேட்டையாடுவார்கள். அவற்றின் இறைச்சியை உணவாகக் கொள்வார்கள். அம்மிருகங்களின் தோலை, ஆடையாக அணிவதற்கும் கூடாரங்கள் அமைப்பதற்கும் பயன்படுத்துவார்கள்.

1 அமரிக்காவின் பூர்வீகக்குடிகள் எவ்வாறு அழைக்கப்படுகின்றனர்?

___

2 செவ்விந்தியர்களின் தலைமயிர் எப்படிப்பட்டது?

___

3 போர்க்காலத்தில் செவ்விந்தியர் தலையில் என்ன அணிவார்கள்?

___

4 செவ்விந்தியர்கள் விரும்பி வேட்டையாடும் மிருகங்கள் இரண்டு தருக.

___

5 செவ்விந்தியர்கள் மிருகங்களின் தோலை எதற்குப் பயன்படுத்துவர்?

______________________________________________

6 செவ்விந்தியரின் சிறப்பான பண்பு எது?

______________________________________________

7 ‘உரம் வாய்ந்த உடல்’ இதில் உரம் என்பதன் ஒத்த சொல் தருக.

______________________________________________

8 ‘பலவிதமான வண்ணங்களைத் தீட்டுவார்கள்’. இதில் வண்ணம் என்பதன் ஒத்தசொல்

______________________________________________

9 ‘அச்சம உண்டாக்கும்’ இதில் அச்சம் என்பதன் ஒத்த சொல் தருக.

______________________________________________

10 ‘விலங்குகளை வேட்டையாடுவார்கள்.’ இதில் விலங்குகள் என்பதன் ஒத்த சொல் தருக

______________________________________________

| வினா இல | 2 | புள்ளிகள் | 10 | பக்கம் | 4 |
|---|---|---|---|---|---|

**சேர்த்து எழுதுக**

1 கருமை + பலகை = ____________________

2 பல் + சிகிச்சை = ____________________

3 காது + அணி = ____________________

4 குறைவு + இல்லை = ____________________

5 அழைப்பு + இதழ் = ___________________

**பிரித்து எழுதுக**

1 மரத்துண்டு = ____________ + ___________

2 பாதணி = ____________ + ___________

3 புலமைப்பரிசு = ____________ + ___________

4 வகுப்பறை = ____________ + ___________

5 மரவேர் = ____________ + ___________

| வினா இல | 3 | புள்ளிகள் | 10 | பக்கம் | 5 |
|---|---|---|---|---|---|

கீழ் வரும் ஆங்கில வசனங்களைத் தமிழில் எழுதுங்கள்.

1 The love of the mother.

_______________________________________________________________

2 She worked so hard.

_______________________________________________________________

3 The boy went to University.

_______________________________________________________________

4 He never paid attention to his studies.

_______________________________________________________________

5 He started to cry loudly

_______________________________________________________________

| வினா இல | 4 | புள்ளிகள் | 10 | பக்கம் | 6 |
|---|---|---|---|---|---|

(I)இடைவெளி நிரப்புக

1 மாலை _______________ (வேலை/வேளை) சிறுவர்கள் விளையாடினார்கள்.

2 அப்பா சுவரில்_________________ (ஆணி /ஆனி) அறைந்தார்.

3 சிங்கம் ______________ (இரை/ இறை) தேடி காட்டில் அலைந்தது.

**(II) விடை தருக**

4 கண்ணன் புல்லாங்குழல் ஊதினான். இதில் எழுவாய் என்ன?

_______________________________________________

5 ஆசிரியர் பாடம் கற்பித்தார். இதில் எழுவாய் என்ன?

_______________________________________________

6 வாணியும் குமாரும் கோவிலுக்குச் சென்றார்கள். இதில் பயனிலை என்ன?

_______________________________________________

7 ஓட்டப் பந்தயத்தில் கண்ணன் தோல்வியடைந்தான். தோல்வி என்பதன் எதிர்ச்சொல் என்ன?

_______________________________________________

8 புலவர் அரசனைப் புகழ்ந்து பாடினார். புகழ்ந்து என்பதன் எதிர்ச் சொல் என்ன?

_______________________________________________

9 சூரியன் மறைய மாலை நேரம் இருள் சூழ்ந்தது. மாலை என்பதன் எதிர்ச் சொல் என்ன?

______________________________________________

10 ‘இளமையிற் கல்வி சிலையில் எழுத்து’ என்று கூறியவர் யார்?

______________________________________________

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **வினா இல** | **5** | **புள்ளிகள்** | **15** | **பக்கம்** | **7** |

அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகமான கங்காருவைப்பற்றி விபரித்து தாய் நாட்டில் வாழும் உறவினர் ஒருவருக்கு கடிதம் எழுதுக (கடிதம் 50 சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும்)

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

| வினா இல | 6 | புள்ளிகள் | 15 | பக்கம் | 8 |
|---|---|---|---|---|---|

தொடங்கித் தரப்பட்டுள்ள கதையை உமது கற்பனையில் 50 சொற்களுக்கு குறையாது எழுதி முடிக்கவும்.

நான் பாடசாலைக்குச் சென்றுகொண்டிருந்தபோது வீதியில், குயின்ஸ்லாந்து மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் வீட்டைவிட்டு வெளியேறிய ஒரு குடும்பம் மிகவும் கவலையுடன் நிற்பதைக் கண்டேன். அவர்களுடன் உரையாடியபோது,இரவு தங்குவதற்கு இடமில்லாமல் நிற்பதாகக் கண்ணீருடன் கூறியதைக் கேட்டு நானும் கவலையடைந்தேன்....

| வினா இல | 7 | புள்ளிகள் | 15 | பக்கம் | 9 |
|---|---|---|---|---|---|

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக.

1 தைத்திருநாள் / சித்திரை வருடப்பிறப்பு
2 அன்னையர் தினம்
3 தமிழ்ப் பாடசாலைக் கலைவிழா